சி5/இ2

20/4/2011

பள்ளிக் கல்வி இயக்ககம் 20 ஏப் 2011

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – சிறுபான்மை மொழி உருது மொழி மற்றும் உருது வழி பள்ளி உதவியாசிரியர், முதுகலை பட்டதாரி ஆசிரியர் நியமனத்திற்கு இனவாரி சுழற்சி முறையை இரத்து செய்து நேரடி நியமனம் செய்ய உரிய விதிகளுக்கு தளர்வு அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக் கல்வித்(க்யு)துறை**

**அரசாணை (4டி)எண்.7** **நாள் 28.02.2011.**
(திருவள்ளுவர் ஆண்டு 2042
மாசி 16)
படிக்க

1. அரசாணை (நிலை) எண். 720, கல்வி, நாள் 20.04.81.
2. அரசாணை (நிலை) எண். 753, கல்வி, நாள் 16.07.85.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.37673/சி5/ இ1/2010, நாள் 04.05.2010 மற்றும் 20.12.2010.

---

**ஆணை :–**

தமிழ்நாடு உருது வழி ஆசிரியர் கழக பொதுச் செயலாளரின் 28.04.2010 நாளிட்ட கடிதத்தில் அரசாணை எண்.281, நாள் 22.09.1999ல் இடைநிலை ஆசிரியர்கள் நியமனத்தின் போது இனவாரி சுழற்சி முறையில் SC, ST, MBC இனங்களில் உருது மொழி வழி படித்த ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் இடைநிலை ஆசிரியர்கள் நியமனத்தில் இனவாரி சுழற்சி முறையை இரத்து செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளதைப் போல் பள்ளி உதவியாசிரியர்கள் மற்றும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் (உருது மொழி மற்றும் உருது வழி) நியமனங்களிலும் இனவாரி சுழற்சி முறையினை இரத்து செய்து விதிவிலக்கு அளித்து வேலைவாய்ப்பு பதிவு மூப்பு அடிப்படையில் நியமனம் செய்திடவும் ஆணை வழங்கிட வேண்டி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

2. பள்ளிக் கல்வி இயக்குநர் தனது கடிதத்தில் 2008–2009 முதல் 12 உருதுமொழி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. 2007–2008 முதல் 8 உருது மொழி முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன எனவும், தமிழ்நாட்டில் உருதுமொழி பட்டதாரி ஆசிரியர்கள், முதுகலை பட்டதாரி ஆசிரியர்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர், இனத்தைச் சேர்ந்தவர்கள் இல்லாததால், உருது பட்டதாரி ஆசிரியர் மற்றும் முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் காலி ஏற்படும்போது, அப்பணியிடங்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நாடுநர்கள் பெயர் பட்டியல் பெற்று, இனவாரி சுழற்சி முறையைப் பின்பற்றி நிரப்புவது இயலாமல் போகிறது என தெரிவித்து, தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப் பணிக்கான சிறப்பு விதிகளில், உருது மொழியாசிரியர் பணியிடத்திற்கு நேரடி நியமனம் செய்ய, உருது மொழியில் பட்டம் (oriental Title of Munshi-I-Fazil (or) Oriental Title of Adib-e-Fazil) மற்றும் தொழிற்கல்வி (B.Ed) சான்று பெற்றிருத்தல் வேண்டும் எனவும் தமிழ்நாடு மேல்நிலைக்கல்வி பணி விதிகளில், முதுகலை உருது மொழியாசிரியர் பணியிடத்திற்கு நேரடி நியமனம் செய்ய, உருது மொழியில் முதுகலை பட்டம் மற்றும் தொழிற்கல்வி (B.Ed) சான்று பெற்றிருத்தல் வேண்டும் எனவும் தெரிவித்து கீழ்க்கண்ட கருத்துருவை அரசுக்கு பரிசீலனை செய்துள்ளார் :

i) அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், உருது பட்டதாரி ஆசிரியர் மற்றும் முதுகலை ஆசிரியர்கள் பணியிடங்களை நிரப்பும்போது, பொது விதி 22–ன்படி இனச்சுழற்சி முறை கடைபிடிக்காது வேலை வாய்ப்பு அலுவலக முன்னுரிமைப்படி நியமனம் செய்யலாம்.

ii) இனசுழற்சி முறைப்படி தகுதி வாய்ந்தவர்கள் பட்டியலை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெற்று, அதில் தகுதி வாய்ந்தவர்கள் இல்லையெனில், செய்தித் தாள்களில் விளம்பரங்கள் செய்து காலியிடங்களை நிரப்பலாம் என்றும், அத்தகைய சூழ்நிலையிலும் தகுதிவாய்ந்த, உருது ஆசிரியர்கள் இனச்சுழற்சி முறையில் நியமனம் செய்ய கிடைக்கவில்லையெனில், இனச்சுழற்சி முறையை பின்பற்றாது, சிறப்பு ~~இனமாக கருதி, வேலைவாய்ப்பு முன்னுரிமைப்படி தகுதியானவர்களைக் கொண்டு~~ காலியிடங்களை நிரப்பலாம். அவ்வாறு நியமனம் செய்யும் போது, இனச்சுழற்சி முறையை பின்பற்ற இயலாத சூழ்நிலை ஏற்படக்கூடும் என்பதால், பொது விதி 22க்கும், தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப் பணி சிறப்பு விதி அரசாணை எண்.753, பள்ளிக் கல்வித் துறை, நாள் 16.07.1985ல் பத்தி 3(a) – வகுப்பு – III பிரிவு –1 (Class III Category-1) க்கும் தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப்பணி விதி அரசாணை எண்.720, கல்வி, நாள் 28.04.1981ல் பத்தி 2(a), வகுப்பு II பிரிவு 2 (Class II(2) க்கும் தவிர்ப்பாணை வழங்கப்பட வேண்டும்.

3. இந்நிலையில், அரசாணை (நிலை) எண்.281, நாள் 22.09.1999ல் இடைநிலை ஆசிரியர்கள் நியமனத்திற்கு விதிவிலக்கு அளித்து ஆணை வழங்கப்பட்டுள்ளதைப் போல் பள்ளி உதவியாசிரியர்கள், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் (உருது மொழி மற்றும் உருது வழி) நியமனங்களிலும் இனவாரி சுழற்சி முறையினை இரத்து செய்து விதிவிலக்கு அளித்து வேலைவாய்ப்பு பதிவு மூப்பு அடிப்படையில் நியமனம் செய்து கொள்ள ஆணை வழங்குமாறும் பள்ளிக் கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில், பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து பள்ளிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையை ஏற்று உருது மொழி மற்றும் உருதுவழி பள்ளி உதவியாசிரியர்கள் மற்றும் முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்திற்கும் பொருந்தும் என்பதால் இனசுழற்சி முறைப்படி தகுதி வாய்ந்தவர்கள் பட்டியலை வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் பெற்று, அதில் தகுதிவாய்ந்தவர்கள் இல்லையெனில், செய்தித் தாள்களில் விளம்பரங்கள் செய்து காலிப் பணியிடங்களை நிரப்பலாம் என்றும், அதற்குப் பின்னரும் மேற்படி ஆசிரியர்கள் நியமனத்திற்கு பிற இனத்தவர் கிடைக்கவில்லையென்றால், இனசுழற்சி முறையினை தளர்வு செய்து வேலை வாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையில் நியமனம் செய்து கொள்ளவும், தொடர்புடைய சிறப்பு விதிகளில் தேவையான திருத்தங்கள் வெளியிடப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வழங்கலாம் என அரசு கருதி அவ்வாறே ஆணையிடுகிறது.

i) அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், உருது பட்டதாரி ஆசிரியர் மற்றும் முதுகலை ஆசிரியர்கள் பணியிடங்களை நிரப்பும்போது, பொது விதி 22–ன்படி இனச்சுழற்சி முறை கடைபிடிக்காது வேலை வாய்ப்பு அலுவலக முன்னுரிமைப்படி நியமனம் செய்யவும்.

ii) இனசுழற்சி முறைப்படி தகுதி வாய்ந்தவர்கள் பட்டியலை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பெற்று, அதில் தகுதி வாய்ந்தவர்கள் இல்லையெனில், செய்தித் தாள்களில் விளம்பரங்கள் செய்து காலியிடங்களை நிரப்பலாம் என்றும், அத்தகைய

சூழ்நிலையிலும் தகுதிவாய்ந்த, உருது ஆசிரியர்கள் இனச்சுழற்சி முறையில் நியமனம் செய்ய கிடைக்கவில்லையெனில், இனச்சுழற்சி முறையை பின்பற்றாது, சிறப்பு இனமாக கருதி, வேலைவாய்ப்பு முன்னுரிமைப்படி தகுதியானவர்களைக் கொண்டு காலியிடங்களை நிரப்பலாம் எனவும் அவ்வாறு நியமனம் செய்யும் போது, இனச்சுழற்சி முறையை பின்பற்ற இயலாத சூழ்நிலை ஏற்படக்கூடும் என்பதால், பொது விதி 22க்கும், தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப் பணி சிறப்பு விதி அரசாணை எண்.753, பள்ளிக் கல்வித் துறை, நாள் 16.07.1985ல் பத்தி 3(a) – வகுப்பு – III பிரிவு –1 (Class III Category-1) க்கும் தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப்பணி விதி அரசாணை எண்.720, கல்வி, நாள் 28.04.1981ல் பத்தி 2(a), வகுப்பு II பிரிவு 2 (Class II(2) க்கும் தவிர்ப்பாணை வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அ.சா.கு.எண்.11955/பி.ந.பி.சி/10–1 நாள்.10.01.2011, ஆதி திராவிடர் நலத்துறை அ.சா.கு எண்.1329/ப.மே2/2011–1 நாள்.24.01.2011 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அ.சா.எண்.4330/இ1/11–1 நாள்.04.02.2011ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–06.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–06.
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம்,
சென்னை–06.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர்,
சென்னை–05.
சமூக நலத்துறை இயக்குநர், சென்னை–05.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை,
சென்னை–05.
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர்,
சென்னை–32.
பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிர்மரபினர் நலத்துறை,
சென்னை–09.

<u>நகல்</u>

பள்ளிக் கல்வித் (எச்.எஸ், மற்றும் எம்) துறை, சென்னை–09.
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–09.
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–02.
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–02.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
28/02/11